# லஞ்சம் வாங்கி சிக்கிய எஸ்.ஐ

# குற்றவாளி என நீதிமன்றம் அதிரடி தீர்ப்பு.

ஈரோடு மாவட்டம், அம்மாபேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றியவர் திரு.V.சந்திரன். அவர், அம்மாபேட்டை, அரிசன காலனியை சேர்ந்த செல்லமுத்து என்பவரிடம், அவரது அசல் ஓட்டுநர் உரிமத்தை வாங்கி வைத்துக்கொண்டு, அதை திருப்பி தருவதற்காக லஞ்சமாக ரூ.500/- கேட்டு வாங்கியதற்காக, கடந்த 04.02.2009 அன்று ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார். மேற்படி வழக்கை விசாரித்த ஈரோடு, முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் தனி நீதிபதி திரு.சரவணன் அவர்கள், இன்று 27.09.2022ல் அவரை குற்றவாளி என ஊர்ஜிதம் செய்து, ஊழல் தடுப்புச்சட்ட பிரிவுகள் 7ன்கீழ் 3ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ.5000/- அபராதமும், 13 (1) (d) ன் கீழ் 3ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ.5000/- அபராதமும் விதித்து அதிரடியாக தீர்ப்பு வழங்கியுள்ளார்.